[27th March 1969

High Schools

* 247 *Q.*—Thiru M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of High Schools, district-wise, in the State of which the Headmasters draw their salary in the scale of Rs. 300—450 as per G.O. No. 2033, Education, dated 24th September 1960; and

(*b*) the number of Headmasters, district-wise, of High Schools with more than 25 classes, who draw their salary according to the above Government Order ?

உயர்நிலைப் பள்ளிகள்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு கல்வி–தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) G. O. No. 2033, Education, dated 24th September 1960 படி 300–450 விகிதத்தில் தலைமையாசிரியர் சம்பளம் வாங்கும் உயர் நிலைப் பள்ளிகள் நமது மாநிலத்தில் மாவட்ட வாரியாக எத்தனை ?

(இ) 25 வகுப்புகளுக்கு மேலுள்ள உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து மேற்கூறிய அரசினர் ஆணைப்படி சம்பளம் பெற்று வருகிற தலைமை யாசிரியர்கள் மாவட்ட வாரியாக எவ்வளவு பேர் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ), (இ) : சட்டமன்ற மேலவை முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையின்படி கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தனியார் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு உரியதாகிய ரூ. 300–450 சம்பளம் கொடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வியிலே ரூ. 300–450 வாங்கக் கூடிய பள்ளிகளின் எண்ணிக்கையைக் கேட்டிருக்கிறார்கள். அதைக் கொடுத்தோம். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏன் கொடுக்கப்படவில்லை என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

Retirement age of Teachers

* 248 *Q.*—Thiru G. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether any decision has been taken by the Government on the age of retirement of teachers; and

(*b*) if not, the stage at which the matter stands ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) அரசாங்கம் உள்ளாட்சி மன்றங் கள் அல்லது அரசாங்க மானியம் பெறும் நிறுவனங்கள் ஆகியவற்றின் நிர்வாகத்தில் கீழுள்ளவையும் கல்வித் துறையால் ஏற்பளிக்கப்பட்டவையு மான தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், பயிற்சிப்பள்ளிகள், சிறப்புப் பள்ளிகள், ஆகிய இவை அனைத்திலுமுள்ள ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயது 55-லிருந்து 58-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால், தனியார் நிறுவனங்களின் கீழுள்ள தொடக்கப் பள்ளிகள், ஆங்கிலோ இந்தியன்

a Printed as Appendix III on page 137